உ

சிவமயம்



அராலி வடக்கு செட்டியார்மடத்தைச் சேர்ந்த

சீர்பெருகு வைசிய குலதிலகர்

உயர்திரு

## முத்துக்குமாருச்செட்டியார் ஆறுமுகச்செட்டியார்

அவர்களின்

# நினைவு மலர்

செட்டியார்மடம் அராலி வடக்கு

வட்டுக்கோட்டை

03-02-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.

அமரர்

# உயர்திரு. முத்துக்குமாருச் செட்டியார் ஆறுமுகச் செட்டியார்.

அவர்கள்



அன்னையின் மடியில்
**1918-12-21**

ஆண்டவன் அடியில்
**2004-01-19**

## திதி வெண்பா

ஆண்டாகும் சுபானு தை தேய்பிறையில்
ஆண்டநன் திரயோதசி மூலமதே — மாண்புடனே
நற்கதிசேர் முத்துக்குமாரு ஆறுமுகச் செம்மல்
உற்ற திதி யென்று ஓது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி ளிளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்ந்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலையில் வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெருவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்வீக மேயாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியுள் மலர்ந்தார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசனொடு ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கணபதி துணை

அமரர்

# முத்துக்குமாருச்செட்டியார் ஆறுமுகம்

அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

சைவமும் செந்தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண நன்நகரில் கொழும்புத்துறை என்னும் நற்பதியில் சிவபூசை செய்து தவநெறி காத்த வைசிய குலத்தில் தோன்றியவரே முத்துக்குமாருச்செட்டியார் ஆவார். அன்னார் அன்னபூரணி என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்தி வந்தார். இவர்கள் இருவரும் செய்த அருந்தவத்தின் பயனாக கனிஷ்ட புத்திரனாக திரு. ஆறுமுகம் அவர்கள் 1918ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் திகதி பிறந்தார். மூத்த சகோதரியாக நாகவல்லி அவர்களையும் . மூத்த சகோதரராக தியாகராசா அவர்களையும் வாய்க்கப் பெற்றார்.

குழந்தை ஆறுமுகம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பெற்றோர். உற்றார். உறவினர் அரவணைப்பில் வளர்ந்து வந்தார். தன் ஆரம்பக்கல்வியை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும். யாழ். பரியோவான் கல்லூரியிலும் பெற்றார் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தார். பின் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அத்தருணம் அராலி வடக்கு செட்டியார் மடத்தைச் சேர்ந்த வைசிய குலத்திலகர் திரு. சண்முகச்செட்டியாருக்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியாரகிய தில்லைநாயகி அம்மையாருக்கும் ஏகபுத்திரியாக அவதரித்த மங்கையற்கரசியைப் பெரியோர்கள் நிச்சயிக்கத் திருமணம் செய்து கொண்டார். இல்லறத்தை நல்லறமாக மேற்கொண்டு வரும் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று புத்திரிகளையும் ஒரு புதல்வனையும் பெற்றெடுத்துச் சீராட்டி வளர்த்து வந்தார். தன் பிள்ளைகளை அன்புடன் ஒழுக்கநெறியில் வளர்த்து கல்வி அறிவையும் விருத்தியடையச் செய்தார். அவ்வாறே தனது பேரப்பிள்ளைகளையும் அன்புடன் வளர்த்து கல்வி அறிவிலும் ஒழுக்க நெறியிலும் சிறப்படையச் செய்தார். அவர்கள் இன்று நல்வாழ்வு பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள்.

திரு. ஆறுமுகம் அவர்கள் ஆசிரியப் பணியையும் மிகச்சிறப்படன் ஆற்றி வந்தார். பல பாடசாலைகள் அன்னாரின் சிறந்த ஆசிரியப் பணியைப் பெற்றிருந்தன. கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம், வெலம்பொட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அநுராதபுரம் நிவத்தக்கரைற்றிய ஆகிய வெளிமாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றியபின் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றார். 1944ம் ஆண்டு தொடக்கம் 1954ம் ஆண்டு வரை கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்தில் கடமையாற்றினார். பின்னர் 1955ம், 1956ம் ஆண்டுகளில் மகரகம ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை பெற்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக வெளியேறினார். பின்னர் நவாலிமகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார். இறுதியாக அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார். "பாத்திரமறிந்து பிச்சை போடு" என்ற வாக்கிற்கு இணங்க மாணவர்களின் ஆற்றலுக்கு ஏற்றவாறு அவர்களின் உள்ளத்தை கவரும்வகையில் திறம்பட ஆங்கிலக்கல்வியைக் கற்பித்தார். தன்னிடம் கல்வி கற்ற மாணவர்களையும் தனது பிள்ளைகள் போலவே கருதி பேரன்பு கொண்டு கற்பித்தார். அதனால் அவரிடம் கல்வி கற்றவர்கள் பலர் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் சீரும் சிறப்புமாக நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு பலவருடங்களாக ஆசிரியப் பணியைச் சிறப்புடன் ஆற்றி தாம் கற்பித்த பாடசாலைகளை நன்கு விருத்தியடையச் செய்தார்.

அன்னார் ஓய்வு பெற்ற காலத்தில் பல சமூக சமயப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். தமது ஊரில் உள்ள உற்றார், உறவினர், நண்பர், அயலவர் ஆகியோரின் தேவைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்றவாறு உதவிபுரிந்து வந்தார். ஓய்வு பெற்ற பின்னரும் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடி வரும் மாணவர்களுக்கு இலவசமாகவே கல்வி கற்பித்து உதவினார். விவசாயத்துறையிலும் ஈடுபட்டு அரும்பணியாற்றினார். இனியவை கூறல், இனியவை செய்தல் சுற்றம் தழுவுதல், விருந்தோம்பல் முதலிய நல்லறங்களை ஆற்றிவந்தார். ஓய்வு நேரங்களில் உற்றார், உறவினர் நண்பர்கள் ஆகியோரின் வீடுகளுக்குச் சென்று நகைச் சுவையான அன்பு மொழிகளால் உரையாடி எல்லோரையும் மகிழ்வடையச் செய்தார்.

இறுதிக் காலத்தில் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டு சமயத் தொண்டுகள் பல ஆற்றினார். குறிப்பாக செட்டியார்மடம் அருள்மிகு மண்டையன் திடல் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தா சபையின் தலைவராக இருந்து ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள் தவறாது நடைபெறுவதற்காக உறுதுணையாக நின்று உழைத்தார். மேலும் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிடேகங்களையும் செய்வித்தார். மேலும் தனது இல்லத்தின் அயலில் உள்ள ஞான வைரவர் ஆலயத்தையும் அண்மையில் புனருத்தாரனம் செய்து மகா கும்பாபிடேகத்தையும் மிகச் சிறப்புடன் நிறைவேற்றினார். நோய்வாய்ப்பட்டிருந்த காலங்களிலும் பிறரின் உதவியுடன் ஆலயங்களின் பணி எவ்வித தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெறச் செய்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் தன் உடல்நலத்தைப் பொருட்படுத்தாது தன்னைச் சந்திக்கவரும் உற்றார், உறவினரோடு மகிழ்ந்து உறவாடி, தன்அன்பு மனைவி, மக்களுக்கு உறுதுணையாக வாழ்ந்து வந்தார். இறுதியாக எவ்வித சிகிச்சையும் பயனளிக்காதநிலையில் எதிர்பாராதவிதமாக உற்றார், உறவினர், அயலவர் யாவரும் கதறியழ சுயஉணர்வுடன் விநாயகப் பெருமானை வழிபட்டவாறு 2004ம் ஆண்டு தை மாதம் 19ம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்துப் பேரின்பப் பெருவாழ்வு பெற விநாயகப் பெருமான் திருவடி சேர்ந்தார். அன்னாரின் ஆன்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" - திருக்குறள்.

யாழ்ப்பாண குடாநாட்டின் சிவபுண்ணிய குறிச்சியாக விளங்கும் செட்டியாமடத்தை வதிவிடமாக கொண்ட முத்துக்குமாரு ஆறுமுகம் அவர்கள் 19 — 01 — 2004 சிவபதமடைந்தார். இச் சோகச் செய்தி அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளோம். இவர் பள்ளிப்பருவத்தில் சிறந்த மாணவனாகவும். தான் ஒரு பட்டதாரியாக வேண்டுமென்ற ஆவலுடன் கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று உயர்வகுப்படைந்து பட்டப்படிப்பிற்காக தெரிவு செய்யப்பட்டு மகரகம ஆசிரியகலாசாலையில் கல்வி பயின்று ஆசிரியராக பட்டம் பெற்றார். நவாலி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும். அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றி இளைப்பாறினார். இவர் ஆசிரிய சேவைமட்டுமல்லாது பல்வேறு சமூக சேவையிலும் ஈடுபட்டுள்ளார். குறிப்பாக அமரர்களான சிற்றம்பலம் செட்டியார். பொன்னையா செட்டியார். சண்முகம் செட்டியார் ஆகியோர் ஒருங்கிணைந்து ஆர்வமுடன் ஆரம்பித்த மண்டையன்திடல் வீரகத்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவாக பணிபுரிந்து ஆலயம் சிறக்க முன்னேற்றத்துடன் உழைத்தார். விநாயகருக்கு மூன்று நேரப் பூசையும் நடைபெறுகின்றது. இது அன்னாரின் மகத்தான சாதனையில் ஒன்றாகும் கடந்த 03 — 05 — 1976ல் விநாயகருக்கு மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியுள்ளது.

பிறந்த யாவரும் இறப்பது திண்ணம். ஆனால் வாழுங்காலத்தில் சுயநலமின்றி பரந்த நோக்கத்துடன் வாழ்வதே மேல். அவ்வகையில் அமரரின் வாழ்வு அமைந்தது. வரவேற்கத்தக்கது. அன்னார் 21 — 12 — 1918 வருடம் தோன்றி 19 — 01 — 2004 வருடம் மறைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை பிரார்த்திப்போமாக.

இவரது பிரிவால் வாடும் மனைவி. பிள்ளைகள். பேரப்பிள்ளைகள். பீட்டப்பிள்ளைகள் அனைவருக்கம் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

**தர்மலிங்கம் தியாகராசா**
"திருப்பதி"
மானிப்பாய். 03 — 02 — 2004

**திருப்பதி**
**குடும்பத்தினர்.**
**மானிப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

திரு. ஆறுமுகம் அவர்கள் இவ்வுலகைவிட்டு மறைந்து விட்டார் என்ற திடுக்கிடும் செய்தியை இலங்கை வானொலி மூலம் கேட்டுத் துணுக்குற்றோம். மிகுந்த வேதனைப்பட்டோம் அந்த வேதனையின் வெளிப்பாட்டை அன்னாரின் குடும்பத்தினருடன் கலந்து கொள்வதற்காகவே இதனை வரைகின்றேன். இவ்வேளை அவரின் மூத்த மகள் இல்லாமல் இருப்பதும் ஏமாற்றமே. அமெரிக்காவிற்கு பயணமாகும் போது தன்தந்தையார் நல்ல சுகமாய் இருக்கிறார் என்ற மனத் தென்போடு தான் சென்றார். ஆனால் அதற்குள் விதி விளையாடிவிட்டது. அவவிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். மேலும் திரு. ஆறுமுகம் அவர்கள் தமது பேரப்பிள்ளைகளாகிய சுரேன், பவானி, செல்வன், ஜனனி ஆகியோரை ஒரு பறவை தன் குஞ்சுகளை இறக்கைக்குள் வைத்துக் காப்பாற்றுவது போல் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்த்தார். அவர்களுக்குக் கல்வி அறிவினைக் கசடறக் கற்பித்தார். அவர்களின் முன்னேற்றம் கண்டு பெருமை கொண்டார். இது நாமெல்லோரும் அறிந்த உண்மையே.

அன்னாரின் இழப்பைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை இறைவன்தான் அவரின் குடும்பத்தினருக்கு அருள வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் "நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை உடைத்திவ்வுலகு" என்ற வள்ளுவன் வாக்கு எம் நினைவிற்கு வருகின்றது. அத்துடன் நில்லாது செத்த பிணத்தருகே இனிச் சாகும் பிணங்கள் கத்தும் கணக்கென்ன? என்ற பட்டினத்தாரின் பாடல் வரியும் எம் மனக்கண்முன் வினாவாக வடிவெடுத்து நிற்கின்றது. நிறைவாக எல்லோர் மனத்திலும் அன்பும் அமைதியும், சாந்தியும் நிலவ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து விடைபெறுகின்றோம்.

அன்புடன்

**புனிதம், திருநாவுக்கரசு**

குடும்பத்தினர்.

இல: 63, 4/2 மயுரா பிளேஸ்

கொழும்பு - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

எதிர்பாராத விதமாக திரு. ஆறுமுகம் அவர்கள் திடீரென மறைந்த செய்தியை அறிந்து நாம் அதிர்ச்சியடைந்தோம். இதனால் நாம் மிக மனவேதனை அடைகிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு இது ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கனடாவிலுள்ள அவரது மகன் செந்தில்நாதனின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை நேரில் சென்று தெரிவித்தோம் அவ்வாறே அமெரிக்காவில் உள்ள அவரின் மூத்த மகள் தில்லைநாயகிக்கும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆகியோருக்கும் தொலைபேசி மூலம் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டோம். அவரின் பிரிவால் மீளாத்துயரில் உள்ள குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு." - (திருவள்ளுவர்)

நித்தியலட்சுமி, ரகுராகவன்
ராதை, தம்பிராகவன், ஆராவமுதன்,
அருந்ததி, பிரணன்

ஒன்ராரியோ,
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

"வையத்துள் வாள்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

அருள்மிகு வீரகத்தி விநாயகரின் அடியை அடைந்துவிட்ட முத்துக்குமாரு ஆறுமுகம் அவர்கள் எமது வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் தலைவராக இருந்து சுயநலம் கருதாது ஆர்வத்துடன் ஆற்றிய சமயத் தொண்டிற்கு எமது பரிபாலன சபை என்றும் கடமைப்பட்டுள்ளது. மீண்டும் எமது ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்ய அன்னார் திட்டமிட்டிருந்த வேளையில் எம்மிடையே இல்லாததையிட்டு மிக வேதனை அடைகின்றோம். நாமும் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல செட்டியார் மடம் மண்டையன்திடல் வீரகத்தி விநாயகரின் அருளை வேண்டுகின்றோம்.

செட்டியார் மடம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

மண்டையன்திடல் வீரகத்தி
விநாயகர் ஆலய
பரிபாலன சபை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சிறிய தந்தை சிறந்த ஆன்மீக சிந்தனையாளர்

தனது கடின உழைப்பால் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் எனது சிறிய தந்தை அமரர் ஆறுமுகம் அவர்கள். தனது ஒன்றுவிட்ட மூத்த சகோதரராகிய எனது பெரிய தந்தையாரிடமும், எனது தந்தையாரிடமும் அளவற்ற பக்தியும், பாசமும் உள்ளவராக இருந்தார். இருவரும் பிறமாநிலங்களில் கடமை புரிந்த காலகட்டத்தில் எங்கள் இரு குடும்பங்களின் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் உறுதுணையாக இருந்தார்.

அமரர் எனக்கு சிறிய தந்தையாக மட்டும் அல்லாது குருவாகவும் இருந்தவர் எனது இளம்பராயத்தில் சிறிது காலம் கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயத்தில் இவரிடம் கல்வி கற்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அப்போது அவர் ஊட்டிய ஆங்கில, தமிழ் அறிவு பிற்காலத்தில் உறுதுணையாக இருந்தது. அமரர் எனக்குக் கற்றுத்தந்த ஆங்கிலப் பாடங்கள் இன்றும் என் உள்ளத்தில் பசுமரத்தாணியாகப் பதிந்துள்ளது.

நான் பிற மாநிலங்களிலிருந்து விடுமுறையில் வரும்போது இவருடன் "Bridge, Chess" ஆகிய விளையாட்டுக்களில் பங்குபற்றித் தேர்ச்சி பெற்றேன்.

நீண்ட காலம் ஆசிரியராக இருந்த அமரர் ஆறுமுகம் அவர்கள் தன் ஓய்வு நேரங்களில் விவசாயத்திலும், கால்நடை வளர்ப்பிலும் சமூக சமயத் தொண்டுகளிலும் ஈடுபாடுடையவராக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பேரப்பிள்ளைகளிடம் அளவற்ற பாசமுடைய எனது சிறிய தந்தையார். அவர்கள் முன்னேற்றத்திற்காகக் கடுமையாக உழைத்துத் தன்னையே தியாகம் செய்தார். இவரது கடுமையான உழைப்பால் இவரின் பேரப்பிள்ளைகள் வாழ்க்கையில் உன்னத நிலையை அடைந்தார்கள்

அமரர் ஆறுமுகச் சித்தப்பா இறையடி மறவாத சிந்தையர். இறைத் தொண்டில் முன்னிற்பது இவரின் சிறந்த ஆன்மீகக்குணம். மண்டையன்திடல் வீரகத்தி விநாயகர் ஆலயத்தை புனருத்தாரனம் செய்து மண்டபம் கட்டி, மகாகும்பாபிஷேகம் செய்ய முழுமனத்தோடு செயற்பட்டவர். இவர் கடந்த சில காலங்களாக தனது தனி முயற்சியால் மீண்டும் கோயிலைப் புனருத்தாரனம் செய்து கொண்டிருந்த வேளையில் சிவபதமடைந்தார். அவர் விட்டுச் சென்ற பணிகள் தொடர விநாயகர் அருள்புரிவார் என நம்புகிறேன்.

எனது அன்புமிக்க உடன் பிறவாச் சகோதர, சகோதரிகளுக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் குல தெய்வமான வீரகத்தி விநாயகரை வேண்டுகின்றேன்.

**இ. சண்முகலிங்கம்.**
ஓய்வுபெற்ற தபாலதிபர்
வெள்ளவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

## செட்டியார்மடம் நலன் கருதிப்பாடுபட்ட உத்தமர்


இத்தகைய உத்தமர்கள் தினமும் இந்த உலக வாழ்வை முடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் நினைவு கூறுவதோ எல்லோருக்கும் நினைவு மலர் வெளியிடுவதோ இல்லை. ஒரு சிலருக்குத்தான் இவ்வித மரியாதை கிடைக்கிறது. தனக்காக வாழ்பவனை உலகம் நினைப்பதில்லை. தனக்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் பயன்பட வாழ்ந்தவர்தான் அமரர் முத்துக்குமாரு ஆறுமுகம் அவர்கள்.

எங்கள் குல தெய்வமாகிய வீரகத்தி விநாயகர் ஆலயத்தை புனரமைப்பு செய்து மகாகும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவேற்றிய பெருமை அமரரை சார்ந்ததாகும். சமூகசேவையே சமூகத் தொண்டன் சேவை எனக் கருதி தமது வாழ்நாளில் பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டு மக்கள் முன்னேற்றத்திற்காகவும் சேவையாற்றிய உத்தமர் மறைந்துவிட்டார்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய வீரகத்தி விநாயகப் பெருமானை பிரார்த்திப்போமாக.

செட்டியார்மடம்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

சந்திரசேகரர் குடும்பம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

எங்கள் குலதெய்வமாகிய செட்டியார்மடம் மண்டையன்திடல் வீரகத்தி விநாயகர் ஆலயம் சில காலம் பூசை இன்றி இருந்த வேளையில் 1972 தை மாதத்தில் பரிபாலன சபை கூடி திரு. மு. ஆறுமுகம் அவர்களைத் தலைவராகவும் என்னைப் பொருளாளர். செயலாளர் ஆகவும் நியமித்தனர். அந்நேரத்தில் இரண்டு நேரப் பூசை ஒழுங்காக நடைபெற்றது. 1976 வைகாசியில் மகாகும்பாபிஷேகம் நடத்த உறுதுணையதக இருந்தவர் 1986ல் முன் மண்டபத்தை வெளிநாட்டவரின் உதவியுடன் சிறப்பாக முடித்து வைத்தார். 1990ல் அடுத்த கும்பாபிஷேகமும் நடத்திக் குருக்கள்மாருடன் அன்னியோன்னியமாகப் பேசி இனிது நிறைவேற்றினார். இவ்வருடமும் கும்பாபிஷேகம் நடத்த இருந்த வேளையில் பிள்ளையார் இவரை எம்மிடமிருந்து பிரித்துவிட்டார்.

அவர் என்னிடத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு நடந்தது போற்றற்குரியது. இவர் சீரும் சிறப்பும் மிக்க சைவ ஆசாரமிக்கவராய் விளங்கினார். பிள்ளையாருக்கு ஒரு காவல் தெய்வம் ஆகவும் எங்கள் குடும்பத்துக்கு அன்பும் ஆதரவும் நிறைந்த ஆசானகவும் விளங்கினார். எங்கள் இன்ப. துன்ப வைபவங்களில் சிறந்த வழிகாட்டியாக விளங்கியவர் அவரது பிரிவால் வாடும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

செட்டியார்மடம்.
அராலி வடக்கு.
வட்டுக்கோட்டை.

**த. மகேந்திரன்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலியூர் ஆசான் மறைந்தான்

ஈழவளத் திருநாட்டில் யாழ்ப்பாண நன்நகரில் காவலரும், நாவலரும் யோகியரும், ஞானியரும் வாழ்ந்த நற்பதியாம் கொழும்புத்துறையில் சீரும் சிறப்புமிக்க வைசிய குலாதிபர் திரு. முத்துக்குமாருச் செட்டியார் தம்பதிகளின் மகனாகப் பிறந்தவர்தான் ஆறுமுகம் என்னும் ஆசான் அவருடன் பிறந்தவர்கள் திருமதி நாகவல்லி கந்தையா, திரு. தியாகராசா என்போர் ஆவார். அமரர் ஆறுமுகம் கொழும்புத்துறையில் தந்தையார் முத்துக்குமாருடன் வசித்ததை நான் அறிவேன். கொழும்புத்துறை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் (தற்போது இந்து மகா வித்தியாலயத்தில்) தனது ஆரம்பக் கல்வியைப் பயின்று ஸ்ரான்லிக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்தார். இதன் பின்னர் மகரகம ஆசிரியர் கலாசாலையில் பயின்று ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1944ம் ஆண்டு தொடக்கம் 1954ம் ஆண்டு வரையும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

சக ஆசிரியர்களாலும் தலைமை ஆசிரியர்களாலும் நன்கு மதிக்கப்பட்டு பாராட்டுக்களையும் பெற்றார். தன்னிடம் படித்த மாணவர்களை காணும் தோறும் அவர்கள் தனக்கு நன்றியைச் செலுத்தும் போதும் ஓர் ஆசிரியரின் மனம் பூரிப்படைகிறது. அது போல ஆசிரியர் ஆறுமுகனாரும் தன்னிடம் நவாலியூரில் படித்த மாணாக்கன் திரு. ராமச்சந்திரனுடன் தான் இப் பூவுலகை விட்டுப் பிரியுமுன்னர் சில மணிநேரம் பாடசாலைக் கதைகளை உணர்ச்சி ததும்பப் பேசினார்.

"எழுத்து அறிவித்தவன் இறைவனாவான்" என்னும் வாசகத்திற்கு இணங்க பல மாணவர்கள் தங்கள் ஆசானை நினைத்து நன்றியுணர்ச்சியுடன் தங்கள் கவலைகளைத் தெரிவித்துள்ளனர். அமரர் ஆறுமுகம் அவர்கள் PWDல் கடமையாற்றிய மாமனார் சண்முகச் செட்டியாரின் மகள் மங்கையற்கரசியை மணம்புரிந்தார். அவர்களின் இல்லறப் பூங்காவில் தில்லைநாயகி தையல்நாயகி, செந்தில்நாதன் என்னும் மும்மலர்கள் தோன்றினர். தனது பிள்ளைகளுடன் ஒருவராகத் தனது தமையனாராகிய தியாகராசாவின் மகள் மாலினியையும் அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் செந்திநாதனும் தெய்வரஞ்சினியும் தாம் பெற்ற துவாரகன் ஆரணி என்போருடன் வாழ்ந்து வருகின்றனர். குருசுவாமியும், தில்லைநாயகியும் பெற்றெடுத்த சுரேந்திரன், அருணா என்னும் மங்கையை மணம் முடித்தார். பவானி சுரேஷ்வேணுகாந்தன் என்னும் மணமகனை முடித்தார். செல்வேந்திரன் உயர் கல்வியுடன் உத்தியோகம் பார்க்கிறார். ஜனனி அகிலன் என்னும் மணமகனை மணம்புரிந்தார். பேரமக்கள் நல்ல நிலையில் இருப்பதை மனங்குளிரக் கண்டு இன்பமுற்றார். ஷயானா, நயனா என்னும் இரு பீட்டப்பிள்ளைகளினதும் மழலைச் சொற்களையும் குறும்புச் செயல்களையும் பார்த்து மகிழ்ந்தார்.

ஆசிரியர் ஆறுமுகம் அவர்களின் எதிர்பாராத மறைவு அவர் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினருக்கும் பெரும் கவலையைக் கொடுத்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க. இராஜசிங்கம்**
முன்னாள் தபாலதிபர்,
கொழும்புத்துறை.

## GUIDING LIGHT

What is in name? They say.
Their is some thing in your name I say.
Mama! You have six faces.
Manifestation of lord muruga,
I see them in my meditation
As moolatharam, swadis thanam, manipooraham,
Anahatham, vishudhi and ajna chakras.
what wonderful experience?
After Satchi mama, Rathina mama and Kadai mama.
The mantle fell on you.
To Guide the destinies of Chediar madam.
You became the uncrowned king.
Nay, the Guardian deity of your crowed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Although you were not the principal of any school,
you were the life force behind.
The Principals of Navaly and Araly schools.

After seven years of seperation,
We were united.
Alas! To our dismay,
Only to be seperated again.

A lot has changed with passing days,
But not your caring and gentle ways.
Your sweet little gestures and affection,
That makes you an epitome of perfection.

Honesty and sincerity were your forte.
When this commodity vanishes day by day.
When the older generation is steeped
In sterility of dead traditions,
You modernised every thing,
To suit present day needs.

"Lifes of great men all remind us
We can make our lifes sublime,
Departing, Leave behind us
Foot prince on the sands of time"

You have Played your part well.
Now you take iternal rest
may your soul rest in peace.

Poopal
(Kokuvil)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நன்றி நவிலல்

எமது குல தெய்வமாகிய
தந்தையார் நோய்வாய்பட்டிருந்த
காலத்தில் மருத்துவ உதவி புரிந்தவர்களுக்கும்,
அவருடன் கூடஇருந்து ஆறுதல்கூறி, பலவழிகளில்
உதவியவர்களுக்கும், அவரது மரணச்சடங்கில்
உதவிபுரிந்தவர்களுக்கும், நேரில் வருகை தந்து
எமது துயரத்தில் பங்குபற்றி ஆறுதல் கூறிய
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமிருந்து
அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும்,
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் சிறப்புடன்
நடைபெற உதவிபுரிந்தவர்களுக்கும், அவற்றில்
கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றிச்
சிறப்பித்தவர்களுக்கும், இம் மலரினை மிகக்
குறுகிய காலத்தில் சிறப்பாகப் பிரசுரித்து
உதவிய மானிப்பாய் திருச்செல்வி
அச்சகத்தாருக்கும் எமது உள்ளம் கனிந்த
நன்றிகள் உரித்தாகுக.





இங்ஙனம்–
அன்னாரின் அன்பு
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org